## 7.13 2006 உள்ளாட்சி தேர்தலில் பணிபுரிந்த அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி4) துறை

அரசாணை (டி) எண்.76 நாள் : 26.2.2007

படிக்க :

1. தலைவர், தமிழ்நாடு அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், 4(20), மேயர் வி.ஆர். இராமநாதன் சாலை, சென்னை–31, கடித நாள் 27.9.2006.
2. செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–26, கடித எண்.9937/2006/AC.2–1, நாள் 18.10.2006.

**ஆணை**

தமிழ்நாடு மாநில அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத் தலைவர் 2001–ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது, தேர்தல் பணி ஆற்றிய அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்களுக்கு, நாள் ஒன்றுக்கு தேர்தல் சிறப்பு தினப்படியாக ரூ.60/– வழங்கப்பட்டது என்றும், தற்போது 5 ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், விலைவாசி உயர்வாலும், 2006 உள்ளாட்சித் தேர்தல் காலத்தில் இரவு, பகல் பாராமல் பணி செய்யும் ஓட்டுநர்களின் பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு, மேற்படி தேர்தல் சிறப்பு தினப்படியை உயர்த்தி, நகருக்குள் ரூ.150/–, ரூ.250/– (peak period)/(Non-peak period) எனவும், நகருக்கு அப்பால் ரூ.200/–ரூ.350/– (peak period)/ (Non-peak period) எனவும் வழங்க வேண்டுமென்றும், தேர்தல் பணிக்கான பணி தொடங்கியது முதல் பணி முடியும் வரை, எத்தனை நாட்கள் வாகனங்களை தேர்தல் பணிக்காக இயக்குகிறார்களோ, அத்தனை நாட்களுக்கும் தேர்தல் சிறப்பு தினப்படியை வழங்க வேண்டுமென்றும், அதுபோல் நிரந்தரப் பணியின் பயணப்படி வழங்கவும் ஆணை பிறப்பிக்கும்படி படிக்கப்பட்ட கடிதம் ஒன்றில் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. 2006–ல் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊராட்சி / வட்டார ஊராட்சி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர் தேர்தல் பார்வையாளர்கள் ஆகியோர் பயன்படுத்திய ஊர்தி ஓட்டுநர்களுக்கு மதிப்பூதியத்தை 10 நாட்களுக்கு உயர்த்தி அளிக்கலாம் என்றும், அதாவது, 5.10.2006 முதல் 12.10.2006 வரை, 13.10.2006 (அல்லது) 15.10.2006 மற்றும் 18.10.2006 (வாக்குப் பதிவுக்கு முந்திய நாட்கள் – 8, வாக்குப் பதிவு நாள் – 1, வாக்கு எண்ணிக்கை நாள் – 1) மற்றும் மீதமுள்ள கூடுதல் பணியாற்றிய காலத்திற்கு ஊர்தி ஓட்டுநர்கள் விதிகளின்படி, பயணப் படியைப் பெறத் தகுதியுடையவர்கள் என்று படிக்கப்பட்ட கடிதம் இரண்டில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய செயலாளர் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்தின் கோரிக்கையையும், மற்றும் இது தொடர்பாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரைகளையும் அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதனடிப்படையில், 2006–ல் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் கூடுதல் பணியுள்ள காலமான வாக்குப் பதிவுக்கு முந்திய எட்டு நாட்கள், அதாவது 5.10.2006 முதல் 12.10.2006 வரை, வாக்குப் பதிவு நாள் ஒன்று, அதாவது 13.10.2006 அல்லது 15.10.2006 மற்றும் வாக்கு எண்ணிக்கை நாள் 18.10.2006, ஆகிய பத்து நாட்களுக்கு மாவட்டத் தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊராட்சி/ வட்டார ஊராட்சி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர் தேர்தல் பார்வையாளர்கள் ஆகியோர் பயன்படுத்திய ஊர்தி ஓட்டுநர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.90/– வீதம் மதிப்பூதியம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படலாம்:

"2015-00-Elections-109. Charges for conduct of Election to Panchayats/Local Bodies - I. Non - Plan - AA. Elections to Panchayats - 33. Payments for Professional and Special Services- 02. Remuneration - Voted". (D.P. Code No.2015-00-109-AA-3328)

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.10174/Allowance/ 2007–1, நாள் 21.2.2007–ன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்